உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

சுடர் : 41
கதிர் : 201

திங்கட்கிழமை
15 ஜூன் 2026

ஆனி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –16
விலை – ரூபா 50



## நயினாதீவு அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 15
வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்து »15

# வலிகாமம் வடக்கில் நீளும் ஆக்கிரமிப்பு!

+ 37 ஆண்டுகள் கடந்தும் வீதியில் மக்கள்
+ ஆண்டு அனுபவிக்கும் இராணுவம்
+ மீள்குடியமர்வில் அசமந்தம் எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 15
போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 17 ஆண்டுகள் கடந்துள்ளபோதும், போரைக் காரணம் காட்டி 37 ஆண்டுகளுக்கு முன் பறிக்கப்பட்ட தங்களின் நிலங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று வலி.வடக்கு மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தங்களின் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள வலி.வடக்கு மக்கள், அதை வலியுறுத்தும் போராட்டங்களையும் ஏற்பாடு செய்துள்ளனர். »15

## புதிய இடத்துக்கு நகர்ந்தது கோப்பாய் பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 15
கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தனியாருக்குச் சொந்தமான காணிகளில் இயங்கி வந்த கோப்பாய் பொலிஸ் நிலையம், புதிய இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாரபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. புதிய பொலிஸ் நிலையத்தைப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் »16

## மீள்குடியமர்வை வலியுறுத்தி இன்று பெரும் போராட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15
வலி.வடக்கில் இருந்து மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு இன்றுடன் 37 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தம்மை மீளக் குடியமர்த்தக்கோரி அந்தப் பகுதி மக்கள் பலாலியிலும், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாகவும் இன்று போராட்டங்களை நடத்தவுள்ளனர்.
1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி வலி.வடக்கு மக்கள் போர் காரணமாக அந்தப் »15

## டெங்கு மரணங்கள் 23 ஆக அதிகரிப்பு!

விரிவு பக்கம்:-03

## இன, மத வாதம் தலைதூக்க இடமளிக்கப் போவதில்லை

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 15
நாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனவாதமும் மதவாதமும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப் போவதில்லை எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கே.எம்.ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.
புதிதாக அமைக்கப்பட்டுள்ள கோப்பாய் பொலிஸ் »15



## செம்மணிப் புதைகுழியில் நேற்றும் இரு என்புக்கூடுகள் அடையாளம்

341 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுகள் நடைபெற்றுவரும் நிலையில், நேற்று புதிதாக இரு மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேநேரம், 4 சிறுவர்கள் »15

## மாயமான புலிகளின் தங்கம்; துரிதகதியில் விசாரணைகள்

கொழும்பு, மே 15
புலிகள் அமைப்பின் சர்வதேச வலைப்பின்னலின் முன்னாள் தலைவரான கேபி எனப்படும் குமரன் பத்மநாதனிடமிருந்து பாதுகாப்புப் படையினரால் பொறுப்பேற்கப்பட்டதன் பின்னர் காணாமல்போயுள்ளதாகக் கூறப்படும் பெருந்தொகை தங்கம் தொடர் »15

## அரச நிகழ்வில் பங்கேற்ற தையிட்டி விகாராதிபதி!

யாழ்ப்பாணம், ஜூன் 15
புதிதாக அமைக்கப்பட்ட கோப்பாய் பொலிஸ் நிலையம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்ட நிலையில், தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையின் விகாராதிபதியும் அந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவரிடம் நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆசீர்வாதம் »15

## சுற்றிவளைப்பு; 829 பேர் கைது

விரிவு பக்கம்:-05



## தமிழ்க் கட்சிகள் இணைந்து அநுரவைச் சந்திக்க முயற்சி

கொழும்பு, ஜூன் 15
தமிழ் பேசும் சிறுபான்மை தேசிய இனங்களைப் பிரதிநித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.
இதன் முதற்கட்டமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற கலந்துரையாடல் கொழும்பில் நடைபெற்றது. »16

## மாகாணத் தேர்தலுக்கு புதிதாகச் சட்டவரைவு

அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 15
நீண்டகாலமாக பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் உள்ள சட்ட முட்டுக்கட்டைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, அரசாங்கம் புதிய சட்டவரைவு ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளது.
தேர்தல் முறைமை தொடர்பான தெரிவுக்கு »15

முச்சந்தி முரளி
"இவ்வளவு வருசமா போராடியும் இந்த அப்பாவிச் சனத்தின்ர குரல் ஆருக்கும் கேக்காதோ?"

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 14.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4460 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 23 37 49 66 |
| விசே. எழுத்து | C |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 14.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1527 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 08 41 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 14.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0486 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 0 4 4 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 14.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2566 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கங்கள் | 01 04 30 72 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 14.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6218 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 6 9 0 6 9 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 14.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2248 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 10 36 37 65 |
| விசேட எழுத்து | Q |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 14.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0334 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 47 57 |

# செம்மணி மனிதப்புதைகுழியை வெளிப்படுத்தியவரே சோமரத்ன!

## அவரது மனைவி ஜனாதிபதிக்கு கடிதம்

**கொழும்பு,ஜுன் 15**

**யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன், மரணதண்டனைக் கைதியான தனது கணவர் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. செம்மணி மனிதப்புதைகுழி விவகாரத்தை வெளிப்படுத்திய ஒரு பிரதான சாட்சியாளர் மாத்திரமேயன்றி குற்றவாளியல்ல என்று சுட்டிக்காட்டி, அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மீண்டும் ஒரு கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.**

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
எனது கணவர் சோமரத்ன ராஜபக்ச கிருஷாந்தி படுகொலையுடன் தொடர்புடையவர் அல்ல. அவர் செம்மணி படுகொலைகளை வெளி உலகுக்குக் கொண்டுவந்த ஒரு சாட்சியாளர் மட்டுமே.
அவர் 1996ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட நாள் முதல் இன்று வரை (சுமார் 28 வருடங்களாக) சிறைச்சாலையிலேயே தண்டனை அனுபவித்து வருகின்றார். அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் மற்றும் கடந்த காலப் படுகொலைகள் குறித்துப் புதிய விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ளது. எனவே, இந்த விவகாரத்தை மீண்டும் முறைப்படி ஆராய்ந்து, அவருக்கு நீதியை நிலைநாட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளார். (ச-இ)

# தேசியப் பிரச்சினைகளில் கூட்டு எதிரணி அவசியம்!

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 15
மாகாணசபைத் தேர்தல், நீதித்துறையின் சுயாதீனம் உட்பட தேசிய முக்கியத்துவமிக்க பிரச்சினைகளின்போது எதிரணிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். அதற்கான பொது மேடையே கூட்டு எதிரணியாகும் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.
கண்டிக்குப் பயணம் மேற்கொண்ட கூட்டு எதிரணி உறுப்பினர்கள் மகாநாயக்க தேரர்களை சந்தித்து, நாட்டு நிலைவரம் தொடர்பில் தெளிவுபடுத்தினர். இலங்கையிலுள்ள ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்கென்றும் தனித்துவமான கொள்கை அடையாளங்கள் உள்ளன.
அதேபோல், தங்களின் அரசியல் நகர்வுகள் குறித்து சுயாதீனமாக முடிவெடுக்கும் அதிகாரமும் அவற்றுக்கு உண்டு. நாம் உருவாக்கியுள்ள இந்த அமைப்பானது ஒரு புதிய அரசியல் கட்சியோ அல்லது தேர்தலுக்கான கூட்டணியோ கிடையாது. இது முற்றிலும் ஒரு பொது மேடையாகும். நீதித்துறை சுயாதீனம் உள்ளிட்ட முக்கியமான விடயங்களில், அரசாங்கத்துக்கு எதிராக அனைத்து எதிரணிகளும் இந்த மேடையில் ஒன்றிணைந்து குரல் கொடுக்கமுடியும் - என்றார். (ச-44)

# சிவாஜிலிங்கத்துக்கு சிகிச்சை வெற்றிகரம்

கொழும்பு,ஜுன் 15
தமிழ்த்தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும், தற்போதைய வல்வெட்டித்துறை நகரசபையின் தவிசாளருமான எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு கடந்த 11ஆம் திகதி கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளதாக தமிழ்த்தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.
அவருக்கான சிகிச்சைகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றன.
இந்தச் சத்திரசிகிச்சை மற்றும் தொடர் சிகிச்சைக்காகப் பேருதவி புரிந்த அனைத்து தமிழ்த்தேசிய உணர்வாளர்கள், அரசியல் தலைவர்கள், அமைப்புகள், நண்பர்கள், கொடையாளிகள் உள்ளிட்ட அனைத்து நல்உள்ளங்களுக்கும் நன்றி. அவர் விரைவில் பூரண நலம்பெற இறைவனைப் பிரார்த்திப்போம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (ச-66)




# தாய்லாந்தில் இலங்கையர் போலிக்கடவுச்சீட்டுடன் கைது

தாய்லாந்து,ஜுன்.15
போலி கனடா கடவுச்சீட்டைப் பயன்படுத்தி லண்டன் செல்ல முயன்ற 20 வயதான இலங்கையர் ஒருவர் தாய்லாந்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
தாய்லாந்தின் சுவர்ணபூமி சர்வதேச விமானநிலையத்தில் இருந்து லண்டன் நோக்கிப் பயணிக்க முயன்றபோது அவர் கைதானார் என குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 14.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | 0926 | U | 4 3 4 4 5 8 |

### Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 14.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | 3192 | I | 33 60 63 64 |

### சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 14.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | B | 16 64 67 68 | 5353 |

### SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 14.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | 1022 | 15 17 38 |

### லக்ன ராசி

| திகதி | தினம் | | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 14.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | மேஷம் | 06 09 30 38 | 4904 |

### KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 14.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | A | 18 | 24 25 27 50 | 2368 |

### அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 14.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | O | 15 26 47 66 | 3018 |

# சுரேஷ் சாலே குற்றமற்றவரெனில் விசாரணைக்கு ஒத்துழைக்கலாம்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 15
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன் தனக்குத் தொடர்பு இல்லையெனில், சுரேஷ் சாலே விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சுரேஷ் சாலே புலனாய்வு அதிகாரியாக, அரச அதிகாரியாக இருந்தவர். எனவே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தனக்குத் தெரிந்தவற்றை கூறி, விசாரணைக்கு அவர் ஒத்துழைக்கவேண்டும். மேற்படி தாக்குதல் சம்பவத்துடன் அவருக்குத் தொடர்பில்லையெனில், விசாரணைக்கு ஒத்துழைப்பதே சிறந்தது. அதேவேளை, இப்ராஹிம் தொடர்பில் நீதிமன்றம்தான் பிணை வழங்கியது. அவரிடம் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனில் பாதுகாப்புத் தரப்பு அதனை செய்யும்.
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி, அதற்கு உதவியவர்கள் உட்பட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதே எமது எதிர்பார்ப்பாகும்- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media




# வடமேற்குக் கடற்பரப்புகளுக்கு ‘சிவப்பு எச்சரிக்கை’

## கடலுக்குச் செல்ல மீனவர்களுக்குத் தடை!

**கொழும்பு, ஜூன் 15**


**காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கல்பிட்டி வரையான இலங்கையின் வடமேற்கு மற்றும் வடக்குக் கடல் பகுதிகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அவசர ‘சிவப்பு’ அச்சுறுத்தல் எச்சரிக்கையை விடுத்துள்ளது.**

இதன் காரணமாக, மறு அறிவித்தல் வரும் வரை கடற்படையினரும், மீனவ சமூகத்தினரும் இந்த ஆழ்கடல் மற்றும் கரையோரக் கடல் பகுதிகளுக்குள் தொழிலுக்காகச் செல்வதைத் முற்றுமுழுதாகத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள விசேட வானிலை எச்சரிக்கை அறிக்கையில், காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கல்பிட்டி வரையான கடற்பகுதிகள் அவ்வப்போது வீசப்போகும் பலத்த காற்றினால் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும். இந்தப் பகுதிகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரை சடுதியாக அதிகரித்து, மிகப் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும். இதேவேளை, நாட்டின் ஏனைய கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பான நிலையை எட்டக்கூடும்.

திருகோணமலை முதல் காங்கேசன்துறை வரை முல்லைத்தீவு ஊடாக மற்றும் கல்பிட்டி முதல் பொத்துவில் வரையான கடற்பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே, இந்தக் குறிப்பிட்ட கடற்பகுதிகளில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களும் கடற்படையினரும் மிகுந்த அவதானத்துடனும் விழிப்புடனும் செயற்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# டெங்கு மரணங்கள் 23 ஆக அதிகரிப்பு!




கொழும்பு, ஜூன் 15

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 23 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. அவர்களில் நான்கு சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர் எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 6 மாத காலப்பகுதியில் 40,443 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் 50 சதவீதமானோர் மேல் மாகாணத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, மாத்தறை, காலி, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்கள் டெங்கு நோய் வேகமாகப் பரவும் மாவட்டங்களாக அடையாளங்காணப்பட்டுள்ளன.

இரண்டு நாள்களுக்கு மேல் நீடிக்கும் கடுமையான காய்ச்சல், தலைவலி, வாந்தி மற்றும் உடல்வலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டால், தாமதிக்காமல் உடனடியாக மருத்துவச் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த வலிநிவாரணி மாத்திரைகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 15

இலங்கைக்குக் கடத்துவதற்காக பதுக்கிவைக்கப்பட்டிருந்த 40 இலட்சம் ரூபா பெறுமதியான 96 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய கியூ பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியை அடுத்த அரியமான் கடற்கரைப் பகுதியில் இருந்து இலங்கைக்குப் படகில் கடத்தல் பொருள்கள் கடத்த இருப்பதாக இராமநாதபுரம் கியூ பிரிவு ஆய்வாளருக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் இந்த வலி நிவாரணி மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதில் இலங்கைக்குக் கடத்துவதற்காக 8 பெட்டிகளில் சுமார் இந்திய மதிப்பில் சுமார் ரூ.40 இலட்சம் மதிப்பிலான 96 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் பதுக்கிவைக்கப்பட்டிருந்துள்ளமை தெரியவந்துள்ளது. (ச-இ)

# டிராக்டர் கவிழ்ந்ததில் ஓட்டுநர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூன் 15

வனாதவில்லுவ, மயிலங்குளம் பகுதியில் வயல் உழுது விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த உழவு இயந்திரம் கவிழ்ந்ததில், அதன் ஓட்டுநர் அதன் அடியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 30 வயதுடையவராவார். சம்பவம் தொடர்பாக வனாதவில்லுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# மின்சாரம் தாக்கியதில் இரு யானைகள் பலி

கொழும்பு, ஜூன் 15

புத்தல - ஒக்கம்பிட்டிய பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளன. சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின்கம்பியில் சிக்கியே அவை உயிரிழந்திருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# ஏன் இழுபறி?-1

**இராமன் இலங்கைக்கு படையெடுக்கிறதுக்காக இராமேஸ்வரத்தில இருந்து பாலம் கட்டிற வேலையள் நடந்து கொண்டிருந்தது. வானரப்படையள் எல்லாம் நல்ல பலசாலியள் எண்டதால பெரிய பெரிய கல்லுகளைக் கொண்டந்து போட்டு கடலை நிரவிக்கொண்டிருந்தினம். இதைத்தூரத்தில இருந்து பார்த்த அணிலொண்டு தானும் அந்தப் பாலம் கட்டிறதுக்கு ஏதும் உதவி செய்ய வேணும் எண்டு நினைச்சுது. ஆனால் அதால கல்லைத் தூக்க ஏலாதே. அதால மணலில உருண்டு பிரண்டிட்டு பிறகு தன்னில மணலை ஒட்டப்பண்ணிட்டு, பாலம் போட்ட பாறையளுக்கு நடுவில போய் தன்ர உடம்பை உதறி அந்த மணலைக் கொட்டப்பண்ணினபடியே இருந்தது. இதை இராமர் கண்டிட்டு, அந்த அணிலைக் கூப்பிட்டு முதுகில தன்ர விரலால மூண்டு கோடு போட்டார். அணிலுக்கு இராமரின்ர கை பட்ட கோடுகள் கிடைச்சது கடும் புளுகம். உண்மையா வேலை செய்ததுக்கு இப்பிடி ஒரு பரிசை இராமர் குடுத்தார். இதைப் பார்த்த புலுனிக்குஞ்சு ஒண்டு தானும் இப்பிடி இராமரிட்ட பரிசு வாங்க நினைச்சு, உடம்பு முழுக்க மணலைப் பூசிக்கொண்டு போய் இராமருக்கு முன்னால நிண்டிருக்கு. இராமருக்கு புலுனிக்குஞ்சு ஒண்டும் செய்யேல எண்டு தெரியும். எண்டாலும் அதின்ர முதுகையும் ஒருக்கா தடவிக் குடுத்தார். அணிலை மாதிரி தனக்கும் முதுகில மூண்டு கோடு விழுந்திருக்கும் எண்டு புலுனி ஓடிப் போய் மற்ற பறவையளிட்டதன்ர முதுகைக் காட்டிச்சாம். ஆனால் அப்பிடி ஒரு கோடுமில்லை. அதால கவலையில பறந்து போக வெளிக்கிடேக்க அதால தூரப் பறக்க ஏலாமல் போட்டுது. அப்பதான், தான் செய்த வேலைக்கு இராமர் தண்டனையா பறக்கிற சக்தியைக் குறைச்சிட்டார் எண்டது புலுனிக்கு விளங்கிச்சாம்.**

**ஏன் இந்தக் கதையெண்டால், இப்ப அணிலை மாதிரி என்னதான் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் அவைக்கு மதிப்பில்லை, புலுனி மாதிரி கடைசி நேரத்தில உடம்பில மணலைப் பூசிக்கொண்டு படம் காட்டுறவைக்குத்தான் மதிப்பு. கிளிநொச்சிப் பாட்டுக்காரப் பெடியன்ர வழக்கு விசயத்தில இதுதான் நடந்திருக்குது. என்னதான் மற்ற அரசியல்வாதிமாரும், லோயர்மாரும் அந்தப் பெடியன்ர விடுதலைக்காக பாடுபட்டாலும் கடைசியா புலுனிமாதிரி திசைகாட்டிக்காரர் 'நாங்கள் தான் விடுதலை செய்தம்' எண்ட பேரை தட்டிக்கொண்டு போட்டினம். உள்ளுக்க இருந்திட்டு வந்த பாட்டுக்காரப் பெடியனுக்கும் வெளியால நடந்ததொண்டும் தெரியாததால , புலுனியள் தான் தன்னை வெளியால கொண்டந்தவை எண்டு நம்பினதாலதான், அவைக்கு நன்றி சொல்லி, சர்ச்சையில சிக்கிட்டார்.**

**அப்ப உண்மையில என்னதான் நடந்தது? போன வெள்ளிக்கிழமை சாவகச்சேரி கோர்ட்ஸுக்கு வழக்கு வர முதலே, திசைகாட்டிக்காரர் கிளிநொச்சிப் பாட்டுக்காரப் பெடியன்ர அம்மாட்ட போய் 'இண்டைக்கு உங்கட மகனை வெளியால கொண்டு வருவம். அதுக்கு நீங்கள் எங்களோட நிக்கோணும்.' எண்டு சொல்லியிருக்கினம். பெத்த மனம் பித்து தானே. தன்ர பிள்ளையை வெளியால எடுக்கிறதுக்கு எந்தப் பக்கம் உதவி கிடைச்சாலும் அதை அவை வேண்டாமெண்டு சொல்லமாட்டினம் தானே. அதோட அரசாங்கப் பக்கத்தால இப்பிடி வாக்குறுதி தரேக்க, அதை இன்னும் நம்புவினமெல்லோ. பாட்டுக்காரப்பெடியனில போட்ட பயங்கரவாதச்சட்டத்தை நிப்பாட்டி, சாதாரண சட்டத்தில வழக்கைப் போட்டதாலதான் வெள்ளிக்கிழமை கட்டாயம் பிணை கிடைக்கும் எண்டு திசைகாட்டிக்காரர், அந்தத் தாயிட்டை வாக்குறுதி குடுத்திருக்கினம். ஆனால் அவையள் தாங்களே பிடிச்ச பெடியனுக்கு தாங்களே பிணையில வெளியில எடுக்க ஏன் அந்தரப்பட்டவை? முதல் வாதாடின லோயரை காய்வெட்டிட்டு ஏன் திசைகாட்டிக்காரர் வேற லோயர்மாரை போட்டவை? வெள்ளிக்கிழமை கிடைக்க வேண்டிய பிணை ஏன் இழுபறிப்பட்டது? எண்டதையெல்லாம் நாளைக்குப் பாப்பம்.**

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



நயினாதீவு - குறிகட்டுவான்

# புதிய படகுப் பாதைச் சேவைக்கு சீனாவிலிருந்து அதிநவீன 'எஞ்சின்'

**யாழ்ப்பாணம்,ஜூன் 15**

**நயினாதீவு - குறிகட்டுவான் இடையேயான புதிய படகுப் பாதை சேவைக்கு , விசேட உயர் சக்தி கொண்ட அதிநவீன எஞ்சின் சீனாவில் இருந்து இலங் கைக்குக் கொண்டுவரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம்- நயினாதீவு இடையே புதிய பயணிகள் படகுப் பாதைச் சேவையை ஆரம்பிப்பதற் காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மைக்கப்பட்டு வரும் நவீனப் படகுக்கட்டுமானப் பணி கள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயம் மற்றும் நயினாதீவு ரஜமகா விகாரை ஆகிய புனிதத் தலங்களுக்கு நாளாந்தம் வருகைதரும் ன உள்நாட்டு, வெளி நாட்டுப் பக்தர்கள் மற்றும் தீவக மக்களின் பாதுகாப்பான கடல்வ ழிப் போக்குவரத்தை உறுதிப்ப டுத்தும் நோக்குடனேயே இந்த நவீனப் படகுப் பாதை அமைக்கப் பட்டு வருகிறது. தற்போது இதன் பிரதானக் கட்டுமானப் பணிகள் அனைத்தும் வெற்றிகரமாக நிறை வடைந்துள்ள நிலையில், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விசேட எஞ்சின் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டு, படகுக் கட்ட மைப்பில் பொருத்தப்படவுள்ளது. அதன் பின்னர் படகுப் பாதைச் சேவை பொதுமக்களின் பாவ னைக்காக திறந்துவிடப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். (ச)

## நயினாதீவு திருவிழாவுக்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவுக் கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆலயச் சூழலில் சைவசமயத்தின் அடையாளமான நந் திக்கொடிகளும், நாக உருவம் பொறிக்கப்பட்ட கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன.ஆலயச் சூழலில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்களின் நலன்கருதிப் போக்குவரத்து, குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.அத்துடன் மஹோற்சவக் காலங்களில் ஆல யச்சூழலில் தினமும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற் பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ஆலயத்தின் பெருந்திரு விழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமா கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 01 . 1948



மறைவு 13 . 06 . 2026

### சரஸ்வதி இரத்தினம்

இத்தாவில் வேம்படுகேணியைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கோண்டா விலை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி இரத்தினம் அவர்கள் 13.06.2026 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கண்ணகை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், இரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், செல்வநாயகம் (லண்டன்), கணேசமூர்த்தி, செல்வரஞ்சினி, சுப்பிரமணியம் (France), பாலகிருஷ்ணன் (தபால் நிலையம் எழுது மட்டுவாழ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரசனா (லண்டன்), ஜெயமதி, பொன்னுத்துரை (அதிபர் - யா / சுதுமலை GTMS), சுபாஜினி (France), துவாரகை (யா / அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் - ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரித்திகா, பரணிகா, டனுசா, சதுர்த்திகன், டனுசன், வினோதா, ஜெமிகா, விமோசனா, நிலக்சன், டிலசிகா, லக்சிமா, பிரித்திக், ஷத்ஜகி, சாயினன், அபியுதன், அஜித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அர்ணிகா, ஆரகன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பலாலிவீதி, கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
மகன் - 077 314 4850
மகன் - 077 324 2969

தகவல்
குடும்பத்தினர்

(cs.57546) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 1939



மறைவு 01 . 06 . 2026

### தங்கலட்சுமி சபாரத்தினம்

யாழ் புங்குடுதீவு 7 ம் வட்டாரம் ஊரதீவைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா Birmingham Selly oak ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தங்கலட்சுமி சபாரத்தினம் அவர்கள் 01.06.2026 திங்கட்கிழமை Birmingham இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் வர்த்தகர் நாகனாதபிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முன்னாள் வைத்தியர் கனகசபை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபாரெத்தினம் (முன்னாள் தபால் திணைக்கள ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவபாலசிங்கம் (லண்டன்), சிவசத்திவேல் (லண்டன்), சிவயோகவதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பூங்குழழி (லண்டன்), தவச்செல்வி (லண்டன்), குணாளன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான முன்னாள் உதவி சட்ட வரைஞர் பாலசிங்கம், நாகம்மா, முன்னாள் வர்த்தகர் சிவலிங்கம், முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் ஜெகதீசன் மற்றும் சேனாதிராஜா (பொறியியலாளர் - கனடா), இரத்தினபூபதி, பஞ்சலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான முன்னாள் அதிபர் இலகுப்பிள்ளை, ராசம்மா, முன்னாள் வர்த்தகர் சேதுராமன் மற்றும் ரஞ்சனாதேவி (கனடா), நாகம்மா (லண்டன்), நிர்மலா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, முன்னாள் ஆசிரியர் காராளசிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சஜிதன், பல்லவி, சுஜிதா, தஜிகன், ஆரபி, அஞ்சனா, அனுசன், சாருகா, வர்ஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2026) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் Moseley Cricket Club Streetsbrook Rd Solihall B90 3 PE, U.K இல் நடைபெற்று, Lodge Hill Cemetery and Crematorium U.K இல் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். **தகவல்:**

**37, கில்னர் லேன்,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**
**நா. பஞ்சலிங்கம் சகோதரன்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

(cs.61661) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






## பொய்யாமொழி

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை**

**பொருள்:** ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும்; பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும் அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.




# ஏனிந்தப் பாரபட்சம்?

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் இருந்த இஸ்லாமிய அடிப்படைவாதம் நாட்டுக்குள் தற்போதும் ஆழமாக வேர்விட்டு வருவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார் சிங்கள கடும்போக்கு அமைப்பான பொதுபலசேனாவின் பொதுச்செயலரான கலகொட அத்தே ஞானசாரதேரர். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான தீவிரவாத வலையமைப்புகள் தற்போது மறைக்கப்பட்டு வருகின்றன. அவைதொடர்பில் பேசுவதற்கு எவரும் முன்வருவதில்லை என்றும் ஞானசாரதேரர் கூறியிருக்கின்றார்.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்துவரும் விசாரணைகளின் வேகத்தில் எவரேனும் குறைகூறலாம். ஆனால், அந்த விசாரணைகளின் செல்நெறி தொடர்பில் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்புகளும் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தி வருகின்றன. அவ்வாறிருந்தும் திசைகாட்டி அரசாங்கத்தின் 'விசாரணைத் திசை' பலருக்கு குழப்பத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவர்களில் ஒருவர்தான் ஞானசாரதேரர். தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துவரும் விசாரணைகளை எப்படியேனும் குழப்பியாகவேண்டும் என்ற ஒரேநோக்கத்தில் நாட்டில் கலகத்தை உருவாக்கக்கூடிய கருத்துகளை முன்வைப்பதில் இவரும் பிரதானமானவர்.

எனவே, ஞானசாரதேரரின் கருத்துகளை ஒரு பொருட்டாக மதிக்கவேண்டிய அவசியம் எவருக்கும் இல்லை. அதேநேரம், 'வழக்கமான இனவாதப் போக்குத்தானே' என்ற தோரணையில் இந்தக் கருத்துகளை அரசாங்கம் புறமொதுக்கி விடவும்கூடாது. இந்தத் தீவில் இன்றளவும் இனவாதம் இறந்து புதையாமல் இருக்கின்றது என்றால், அதற்குக் காலம் காலமாகத் தோன்றிய இத்தகைய பேரினவாதப் புள்ளிகள்தான் காரணம். அவர்களின் கருத்துகள் ஏதோவொரு சமூகக்குழுக்களால் ஆழமாகப் பின்பற்றப்படுகின்றன. பின்னர், வன்முறையாகவும், கலவரமாகவும், இனக் குரோதமாகவும், மத நிந்தனையாகவும் பீறிட்டுக் கிளம்புகின்றன. எனவே, ஞானசாரதேரர் போன்றோர் வெளிப்படுத்தும் இனவாதக் கருத்துகளை அரசாங்கம் கருத்தில் எடுத்து, அவர்களுக்கு சட்டத்தின் பிடியால் உரிய பதிலை வழங்க வேண்டும்.

அத்துடன், முஸ்லிம்களுக்கு விரோதமான கருத்துகளை ஞானசாரதேரர் வெளிப்படுத்துவது இதுவொன்றும் முதல் முறையல்ல. முஸ்லிம் விரோதக் கருத்துக்காகவும், செயற்பாட்டுக்காகவும் அவர் நீதிமன்றத்தால் தண்டனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார். எனவே, இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இயல்பாகவே ஒரு சட்டப்பிடிமானம் உள்ளது. ஆதலால், அவரைப் பேசவிட்டு வேடிக்கை பார்க்கும் போக்கை அரசாங்கம் தவிர்க்கவேண்டும். ஒரு பாடலுக்காக 'ஆற்றுகைக்காக' பாடசாலைகளில் செய்யப்படும் சோடனைக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணை முன்னெடுக்கும் இதே அரசாங்கம், பயங்கரவாதத்துடன் நேரடியாகத் தொடர்புள்ள விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்தும் கருத்துக்கள் மட்டில் மௌனமாக இருப்பது பெரும் அபத்தமானது. இவர்களைப் பேசவிட்டால், இன்று ஞானசாரதேரர், நாளை இன்னொருவர் என ஒருவர் பின் ஒருவராக வந்துகொண்டே இருப்பார்கள். இந்தத் தீவில் இன நல்லிணக்கம் என்பது சாத்தியம் அற்றதாகவே அமையும். எனவே ஒரு பாடலுக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்வதில் காட்டிய வேகத்தை ஞானசாரதேரர் போன்றோரின் நச்சுக்கருத்துகளுக்கு எதிராகவும் இந்த அரசாங்கம் காட்டுமா?

# சிறுவர்களிடையே பரவும் நோய்கள்

## பெற்றோர் அவதானம்!

**கொழும்பு, ஜூன் 15**

**நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறுவர்களிடையே சில நோய்கள் வேகமாகப் பரவிவருவதால், பெற்றோர் தங்களது பிள்ளைகளின் ஆரோக்கியம் குறித்து மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று கொழும்பு லேடிரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட குழந்தைகள் நலவிசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.**

சிறுவர்களிடையே தற்போது டெங்கு, இன்ஃளுயன்சா, கை, கால் மற்றும் வாய் நோய், மற்றும் மெனிஞ்சைடிஸ் ஆகிய நான்கு வகையான நோய்கள் பரவி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த நோய் பரவுவதைக் குறைப்பதற்காகப் பிள்ளைகளுக்கு எப்போதும் சுத்தமான உணவு, கொதித்தாறிய குடிதண்ணீரை மாத்திரம் பருகுவதற்குக் கொடுத்தல் வேண்டும். அத்துடன் இருமல், தடிமன் உள்ளவர்கள் முகக்கவசம் அணிவது மிகவும் பொருத்தமானது. இந்த நோய் நிலைகள் குறித்துப் பெற்றோர்கள் மட்டுமன்றி, முன்பள்ளி மற்றும் பாடசாலை ஆசிரியர்களும் விழிப்புடன் செயற்படவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



# நாடு கடத்தப்பட்டவர்கள் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, ஜூன் 15

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் கும்பலின் சந்தேகநபர்களான 'புளுமெண்டல் சங்கா' மற்றும் 'மோதர நிபுன்' ஆகியோர் அபுதாபியிலிருந்து நாடுகடத்தப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கையில் பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டுவிட்டு தப்பிச்சென்று அபுதாபியில் தலைமறைவாகியிருந்த நிலையிலேயே இந்த இருவரும் ஐக்கிய அரபு அமீரகத்தின் பாதுகாப்பு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அங்கு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் அபுதாபி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டனர். (ச-இ)

# சுற்றிவளைப்பு; 829 பேர் கைது

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் போதைப்பொருளைத் தடுக்கும் நோக்கிலான 'முழு நாடுமே ஒன்றாக' எனும் தேசியத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 829 பேர் போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 13 பேர் கைதுசெய்யப்பட்டதுடன், சட்டவிரோதச் சொத்துக் குவிப்புத் தொடர்பான விசாரணைகளின்பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நாயுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 15

அத்துருகிரிய கொடகம வீதியின் பனாகொட பகுதியில், பாதையைக் கடக்க முயன்ற நாய் மீது மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டுநர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்த விபத்து நடந்துள்ளது. உயிரிழந்தவர் பனாகொட பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது. (ச-இ)

# டவர்களில் கேபிள்கள் திருடியவர்கள் கைது

தொலைத்தொடர்புக் கோபுரங்களில் உள்ள கேபிள்களைத் துண்டித்துத் திருடிய சந்தேகநபர்கள் இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். ராகம பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இந்த இரு சந்தேகநபர்களும் 17 கிராம் 700 மில்லிகிராம் 'ஐஸ்' போதைப்பொருளுடன் சிக்கியுள்ளனர். சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவர்கள் சுமார் 922,750 ள துண்டித்துத் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது. (ச-இ)


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111

செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AIA நிறுவனத்தின் வடக்கு கிழக்கு மாகாணங்களை அலங்கரிக்கும் மணிமகுடங்கள்



AIA காப்புறுதி நிறுவனமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறப்பாகச் செயற்பட்ட தனது நிறுவன ஊழியர்களைக் கௌரவிக்கும் வைபவத்தை அண்மையில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தியது.

இந்நிகழ்வு 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி வவுனியாவில் அமைந்துள்ள நோர்த்வே ஹோட்டலில் கோலாகலமாக நடைபெற்றது. நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் சேவைத்திறனுக்கும் முக்கியமான பங்களிப்பை வழங்கிய சாதனையாளர்கள் இந்நிகழ்வில் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக AIA நிறுவனத்தின் பிரதம முகவர் அதிகாரி (Chief Agency Officer) திமுத்து பியசேன அவர்கள் கலந்துகொண்டதுடன் கௌரவ விருந்தினராக இணைப்பணிப்பாளர் செர்மால் பெர்னாண்டோ அவர்கள் கலந்து சிறப்பித்தார். மேலும் நிறுவனத்தின் பல சிரேஷ்ட முகாமையாளர்கள்இ அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

AIAகாப்புறுதி நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் நிதிப் பாதுகாப்பிற்கும் முக்கியமான பங்காற்றிவருகின்ற முன்னணி நிறுவனமாக திகழ்கிறது. அனுபவமிக்க நிர்வாகம் திறமையான சேவை மற்றும் சர்வதேச தரத்திலான செயற்பாடுகள் மூலம் நிறுவனம் மக்களின் நம்பிக்கையைத் தொடர்ந்து பெற்றுவருகிறது.

அதேவேளை ஊழியர்களின் திறமைகளை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவிக்கும் பல்வேறு திட்டங்களையும் ALA முன்னெடுத்துவருகின்றது. தங்களது அர்ப்பணிப்பு மற்றும் சாதனைகளின் மூலம் பலர் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் பாராட்டுகளையும் விருதுகளையும் வடக்கு, கிழக்கு பிராந்திய ஊழியர்கள் பெற்றுள்ளனர்.

இன்றைய நவீன உலகில் செயற்கை நுண்ணறிவு மற்றும் கணினி அறிவியல் தொழில்நுட்பங்கள் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. அதனுடன் இணைந்து ஆதாரமுடைய சாதனங்கள் ஸ்மார்ட் சாதனங்கள் மற்றும் பல முன்னேற்றமான தொழில்நுட்பங்களும் உருவாக்கப்பட்டுவருகின்றன. இத்தகைய மாற்றங்களின் மத்தியில் மனித வளத்தின் அர்ப்பணிப்பும் திறமையும் நிறுவன வெற்றியின் முக்கியமான அஸ்திவாரமாக தொடர்கின்றமை இந்நிகழ்வின் மூலம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. விடாமுயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் அவர்களுடைய தொழில்முறை ஆளுமையுடன் நிறுவனத்தின் பல்லாண்டு கால அனுபவம் ஒன்றுசேரும்போது ஒவ்வொருவரும் மிகச்சிறந்த சாதனையாளர்களாக உருவெடுத்துவருகின்றனர்.

எதிர்கால தலைமுறையினருக்கு சிறந்த வழிகாட்டலையும் தொழில் வாழ்க்கையில் வெற்றியாளர்களாக மாறும் வாய்ப்பையும் வழங்கும்வகையில் AIA மேற்கொண்டு வரும் முயற்சிகள் அளப்பரியவை. குறிப்பாக பிராந்திய இளைஞர்கள் நிறுவனத்தில் இணைவதன் மூலம் தங்களது வாழ்க்கையை முன்னேற்றுவதோடு மட்டுமல்லாது தமது பிராந்திய மக்களுக்கு பயனுள்ள மற்றும் தரமான சேவைகளையும் வழங்கமுடியும் என்பதும் இந்நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வின்போது பல்வேறு பிரிவுகளில் சிறந்து விளங்கியோர் கௌரவிக்கப்பட்டனர்.

2026ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான அதிகூடிய ANP நம்பிக்கை மதிப்பெண் பிரிவில் "சிறந்த விநியோக அலகு விருது" கிளிநொச்சி துணை விநியோக அலகிற்கு வழங்கப்பட்டது. அதேவேளை "2026 முதல் காலாண்டின் சிறந்த வெல்த் பிளானர் மற்றும்"முதல் காப்புறுதிக் கட்டண சாதனையாளர்" ஆகிய விருதுகளை கிளிநொச்சி பிரதான கிளையைச் சேர்ந்த க. பிரான் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மேலும் "2026 முதல் காலாண்டின் சிறந்த வெல்த் பிளானர் முகாமையாளர் மற்றும் சிறந்த ஆட்சேர்ப்புச் சாதனையாளர்" ஆகிய இரு முக்கியமான விருதுகளையும் கிளிநொச்சி பிரதான கிளையைச் சேர்ந்த திருமதி பி. ராஜிகா தனதாக்கிக் கொண்டார். வவுனியா பிரதான கிளையைச் சேர்ந்த து. சிறீஸ்கரன் "2026 முதல் காலாண்டின் உற்பத்தித்திறன் சாம்பியன்" விருதைப் பெற்றார்.

அத்துடன் நிகழ்வை மேலும் சிறப்பித்த கலாசார உடைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி பிரதான கிளையைச் சேர்ந்த ச. சுகிர்தரன் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி உபகிளையைச் சேர்ந்த திருமதி வி. ஹரன்ஜா ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

எதிர்காலத்திலும் சமூகத்திற்கு பயனுள்ள சேவைகளை வழங்குவதோடு இளைஞர்களுக்கும் தொழில் ஆர்வமுள்ளவர்களுக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் AIA தனது பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றது.

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும்.

**இடபம்:** சகோதரவகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில்வழக்கமானநிலையே காணப்படும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும்.

**துலாம்:** பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் – மனைவிக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** இன்றைக்கு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம்கேட்டு வருவார்கள். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத் தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media









# சர்வதேச மனக்கணிதப்போட்டியில் முல்லை கலைமகள் வித்தி சாதனை

முல்லைத்தீவு,ஜூன் 15

சர்வதேச I CAM ABACUS மனக்கணிதப் போட்டியில், முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். குறித்த பாடசாலையைச் சேர்ந்த துஷ்யந்தன் காருஜன் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்து தேசிய மட்ட மனக்கணிதப் போட்டியில், குறித்த மாணவன் சர்வதேசப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். சர்வதேசப் போட்டி கடந்த 4ஆம் திகதி மலேசியாவில் இடம்பெற்றது. இதில் குறித்த மாணவன் level 1 B பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இந்தப் போட்டியில் 13 நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். அதேவேளை குறித்த போட்டியில் Junior level இல் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த ச.தக்சவி முதலாமிடத் தையும் ஜெ.பார்த்தீவ் முதலாம் இடத்தையும், ப.தன்விஸ் இரண்டாம் இடத்தையும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-35)


எஸ். பிரனாத் (முதலிடம்)


பருத்தித்துறை சிவன் கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் ஏழாம் திருவிழாவான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பசுபதீச்சர பெருமான் முத்துச் சப்பறத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ச-41-100)


டி. ஜபீஸ் (முதலிடம்)


வி. விதுஷன்(முதலிடம்)


டி. சுலக்சன் (இரண்டாமிடம்)

# குத்துச்சண்டைப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் 4 பதக்கங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 15

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்குட்பட்டோருக்கான குத்துச்சண்டைச் சாம்பியன் ஷிப் போட்டியில், யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் குத்துச்சண்டை வீரர்கள், மூன்று தங்கப்பதக்கங்களையும், ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் வென்று தேசியமட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். 75 கிலோகிராம் 81 கிலோகிராம் எடைப் பிரிவில் எஸ். பிரனாத் (முதலிடம்), 64 கிலோகிராம் 69 கிலோகிராம் எடைப் பிரிவில் டி. ஜபீஸ்(முதலிடம்), 52 கிலோகிராம் 56 கிலோகிராம் எடைப் பிரிவில் வி. விதுஷன்( முதலிடம்), 46 கிலோகிராம் 49 கிலோகிராம் எடைப் பிரிவில் டி. சுலக்சன்( இரண்டாமிடம்) ஆகியோர் இந்தச் சாதனையைப் படைத்துள்ளனர். (க)

# யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழிசை ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூன் 15

முதலாவது பன்னாட்டுத் தமிழிசை ஆய்வு மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், மாணவர்களது கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. கந்தையா கார்த்திகேசு நிதியத்தின் நிதிப்பங்களிப்புடன் இடம்பெற்ற மாநாடுக்கு, சே.பொ.இ.கா.ஆ.க. பீடத்தின் இசைத்துறைத் தலைவர் கலாநிதி சி. சூரியகுமார் தலைமை தாங்கினார். மாநாட்டில், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் தி. வேல்நம்பி, முனைவர் அரிமளம் பத்மநாபன் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-27)






பாராட்டி வாழ்த்துகின்றோம்
சோ. சுசீந்திரராஜக்குருக்கள்
(கோப்பாய்)
கோப்பாய் வடக்கு "சித்தாந்த பானு"
சிவஸ்ரீ சோ.சுப்பிரமணியக்குருக்களின் பேரனும்
சோமசுந்தரக்குருக்கள் கோமளாம்பிகை
தம்பதிகளின் புத்திரனுமாகிய
சோ.சுசீந்திரராஜக்குருக்கள் (ஆதீனகர்த்தா
செல்வவிநாயகர் தேவஸ்தானம் - கோப்பாய்)
அவர்கள் தொழில்நுட்பவியல் (சிவில்) சேவையில்
விசேட தரத்திற்கு (Special Grade) இல்
பதவியுயர்வு பெற்றமைக்கு மனமகிழ்வு அடைவதோடு
வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.
வாழ்த்துவோர்:- குடும்பத்தினர் - 075 158 1025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

படம் : ஐ. சிவசாந்தன்



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தினமான கடந்த வியாழக்கிழமை காலை ஆலயத்தில் சகஸ்ரசங்காபிஷேகம் நடைபெற்றது. விசேட அபிஷேக பூசைகள் நடத்தப்பட்டு. மூலஸ்தானத்தில் வீற்றுள்ள வேல் பெருமானுக்கு அந்தண சிவாச்சாரியார்களால் 1008 சங்குகளால் ஆனந்த அபிஷேகம் இடம்பெற்றது. (சு)

மாகாணமட்ட கராத்தே போட்டியில், 16 வயதுப் பிரிவில், வவுனியா புதுக்குளம் ம.வி. மாணவன் ஜெ.துஸாந்தன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (க)



# பாடசாலைத் தோட்டப் போட்டி யாழ். இந்து இரண்டாமிடம்!



யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமாகாண ரீதியாக யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத்திய பாடசாலைத் தோட்டப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

குறித்த பாடாசாலை மாணவர்கள் கடந்த நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைத் தோட்டம் அமைக்கும் செயற்பாட்டின் மூலம், சேதன முறையிலான மரக்கறிகளை அறுவடை செய்து அதனை வீட்டுத்தோட்டக் கழகத்தினர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை மீள முதலிட்டு ஏனைய மாணவர்களுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தி வருகின்றனர். (க)


## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 04 . 1935



இறப்பு 12 . 06 . 2026

(CS/31989) J-1

### தேவநேசன் நேசையா

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் மன்னார் மாவட்டங்களின் முன்னாள் அரசாங்க அதிபரான தேவநேசன் நேசையா அவர்கள் கடந்த (12.06.2026) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அனித்தாவின் (ஜீவி) அன்புக் கணவரும், வசீ, வாசுகி, குமியின் அன்புத் தந்தையும், சயேபா மற்றும் நந்திகேசனின் மாமனாரும், உதயனன், மேகினி, நவால், சஞ்ஜீவி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், சிவா, ராஜன் ஆகியோரின் பூட்டனாரும், புஷ்பதேவி, நிமலா, காலஞ்சென்ற லங்கா நேசையா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.06.2026 ஞாயிற்றுக்கிழமையும், இன்று (15.06.2026) திங்கட்கிழமையும் காலை 8.30 மணிமுதல் பொரளை A F Raymond's மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிகிரியைகள் நாளைமறுதினம் (17.06.2026) புதன்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு பொரளை கணத்தை சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்



### பிரசாந்தன் கஜலக்ஷி

தோற்றம் 17.08.1993 மறைவு 14.06.2026

(முகாமைத்துவ உதவியாளர் கோல்டன் ஈகில் பிறைவேற் லிமிட்டட்)

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரசாந்தன் கஜலக்ஷி அவர்கள் நேற்று (14.06.2026) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காந்தகுமார் - ஜமுனாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், ஞானசேகரம் - கலாவதி தம்பதியரின் அன்பு மருமகளும், ஞானசேகரம் பிரசாந்தனின் (Sales rep godrej) அன்பு மனைவியும், லக்ஷிகா, சங்கரன், கிரிஷிகன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விதுசன், வசீகரன், விஷாலினி, சயந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், வரதன், சந்திரவதனி ஆகியோரின் அன்பு மருமகளும், விக்னேஸ்வரன், லலிதா, ரஞ்சினி, கலைவாணி, சரோஜாதேவி, சுசிலாதேவி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2026) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
அட்டகிரி வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
077 421 9767

(CS/31990) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி



அகிலமெங்கும் போற்றப்படும் அறுபத்து நான்கு சக்திபீடங்களுள் ஒன்றாக, ஆன்மிகச் சுடராகத் திகழ்வது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருத்தலம். ஏழ்கடல் சூழ்ந்த சமுத்திரத்தின் மத்தியில், 'மணிபல்லவம்' என்ற வரலாற்று மற்றும் இலக்கியச் சிறப்புகளுடன் மிளிர்கிறது நயினாதீவு என்னும் புண்ணிய பூமி. இந்த அழகிய தீவிலே, மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்று, அகில உலகத்து ஆன்மாக்களுக்கும் அள்ளி அள்ளி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள் அன்னை நாகபூஷணி.

அடியார்கள் 'அரோகரா' என்ற பக்தி முழக்கத்துடன் வந்து கால்பதிக்கும் நயினாதீவு இறங்குதுறையே இயற்கையின் கொடை எனலாம். உலகியல் என்னும் ஆலைக் கடலில் அகப்பட்டு அலைகழிக்கப்படும் மானுடர்களுக்கு, தன் வாசக்கமலத் திருவடிகளைத் தலைமேல் வைத்து, அருள்நேசக் கரங்களை நீட்டி அசைக்க முடியாத நிம்மதியைத் தருகிறாள் அன்னை. இத்தலத்தின் ஆகச்சிறந்த அம்சம், இங்கு காலாதிகாலமாகத் தொய்வின்றித் தொடர்ந்து வரும் தூய்மையான நாக வழிபாடாகும்.

### சர்ப்பத்தின் தவமும் நாகபூஷணி திருநாமமும்

தொடக்க காலத்தில் நாக வழிபாடாக இருந்து, காலப்போக்கில் அன்னை நாகபூஷணி வழிபாடாக இத்தலம் பரிணமித்தது. முன்னொரு காலத்தில், சர்ப்பம் ஒன்று இங்கு கடும் தவம் புரிந்து தன் சாபத்தை நீக்கிக்கொண்டதாகவும், அத்தகு சிறப்பினைத் பெற்ற சர்ப்பத்தைத் தனது திருமேனியில் அம்பிகை ஆபரணமாக அணிந்து அருள் வழங்கியதாலுமே, இங்கு எழுந்தருளியிருக்கும் அன்னைக்கு 'நாகபூஷணி' (நாகத்தை ஆபரணமாக பூண்டவள்) என்ற திருநாமம் நிலைபெற்றது என்பது வரலாறு.

இன்றும் அடியவர்கள் முழுமையான நம்பிக்கையோடு தங்களின் நாகதோஷங்கள் நீங்கி நற்பேறடையவும், பிள்ளைப்பாக்கியம் பெறவும் அலைகடல் கடந்து நயினையை நோக்கி வந்தவண்ணமே உள்ளனர். அலைகடலில் நீந்தி, அருட்கடலை நாடி வரும் பக்தர்களின் நெக்குருகும் பக்திக்கு அன்னை என்றும் ஏமாற்றம் அளிப்பதில்லை.



### விக்கிரகத்தின் விந்தையும் வரலாற்றுப் பின்னணியும்

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொன்மையும் மகிமையும் கொண்டது இவ்வாலயம். நாகபூஷணி அம்மனின் மூலவிக்கிரகம் பூர்வீகமான -பழமை மிகுந்த -சிறப்பினைக் கொண்டது; ஆன்ம கோடிகளுக்கு அருள் பிரவாகத்தை அள்ளி வழங்கவல்ல தனித்துவம் மிக்கது. இம்மூல விக்கிரகத்தின் அமைப்பும் அற்புதமும் உலகிலே வேறெந்த திருத்தலத்திற்கும் இல்லாத ஒன்றாகும். மூலஸ்தானத்தில் அன்னை வடிவமாக விளங்குவது பூர்வீக நாகப்பிரதிஷ்டை என்பது ஆராய்ச்சியாளர்களின் கூற்று. இதன் பின்புறத்தில் ஐந்து தலை நாகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இதன் தொன்மைக்குச் சான்றாகும்.

### அனலைதீவு நாகமும் வணிகனின் சான்றுகளும்

இவ்வாலயத்தின் தொன்மைக்குச் சான்றாக சுவாரசியமான வரலாற்று நிகழ்வொன்று வழங்கிவருகிறது. முற்காலத்தில், அனலைதீவின் புளியந்தீவிலிருந்து நாகம் ஒன்று நாள்தோறும் பூக்களைத் தன் வாயில்கவ்வி கடல்வழியாக வந்து நயினை அம்பாளை வழிபட்டு வந்தது. ஒருநாள், வழியில் ஒரு கழுகு (கருடன்) அந்த நாகத்தை வழிமறித்துக் கொல்ல முயன்றது. அச்சமடைந்த நாகம் கடல் நடுவே இருந்த ஒரு கல்லினைச் சுற்றிக் கொள்ள, கருடனும் மற்றொரு கல்லில் அமர்ந்து சமயம் பார்த்திருந்தது.

அவ்வேளையில், கடலில் மரக்கலத்தில் வந்த வணிகன் ஒருவன் இக்காட்சியைக் கண்டு இரக்கமுற்று, நாகத்தைக் கொல்ல வேண்டாமென கருடனிடம் வேண்டினான். அதற்கு கருடன், "நீ உனது செல்வம் அனைத்தையும் கொண்டு அன்னை நாகேஸ்வரிக்கு ஒரு பளபளக்கும் ஆலயம் அமைப்பதாக உறுதியளித்தால் நாகத்தை விடுவேன்" என்றது. வணிகனும் அவ்வாறே சம்மதிக்க, கருடன் விலகியது. பின்னர் வணிகனும் அவனது மனைவியும் தெய்வீக ஒளிவீசும் நாகரத்தினக் கற்களின் துணையோடு அன்னைக்கு எழில்மிகு ஆலயம் எழுப்பினர். இக்கதைக்குச் சான்றாக, இன்றும் நயினாதீவு வடகடலில் 'பாம்பு சுற்றிய கல்', 'கருடன் இருந்த கல்' என இரு கற்கள் காணப்படுகின்றன. மகோற்சவத்தின் பதினோராம் திருவிழாவன்று இவ்விரு கற்களுக்கும் பூசைகள் நடக்கும்போது, வானில் கருடன் வட்டமிடுவது இன்றும் அடியார்களை மெய்சிலிர்க்க வைக்கும் காட்சியாகும்.

### தேவலோகக் காட்சியும் அமுதசுரபியின் அட்சய பாத்திரமும்

அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியாக விளங்குகின்ற நாகபூஷணி அம்பாள், ஐந்து தலை நாக வாகனத்தில் பவனி வரும் காட்சியும், மஞ்சத்தில் எழுந்தருளி அசைந்துவரும் அழகும் தேவலோகக் காட்சிகளாகும். கைலாச வாகனத்திலும், மாபெரும் தேரிலும் அன்னை உலா வரும்போது அடியார்களின் கண்களிலிருந்து பக்திப் பெருக்கால் கண்ணீர் சொரிவது உணர்வுபூர்வமான வழிபாடாகும்.

இத்தலத்திற்கு வருகை தரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பசியாற்றும் உன்னதப் பணியைச் செய்து வருகிறது 'அமுதசுரபி' அன்னதான சபை. 1960ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பெரும்பணி இன்றுவரை தொய்வின்றித் தொடர்கிறது. மணிமேகலையின் காப்பிய வரலாற்றோடு தொடர்புடைய இத்தீவின் அன்னதான சபைக்கு, அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திர நினைவாக 'அமுதசுரபி' என்ற திருநாமத்தை வழங்கியவர் புகழ்பெற்ற அறிஞர் கி. வா. ஜகந்நாதன் ஆவார்.

### 2026 நயினை அம்மனின் பெருவிழா

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டி நிற்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் 2026ஆம் ஆண்டுக்கான பெருந்திருவிழா, இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் மிக விமர்சையாக ஆரம்பமாகின்றது. இத்திருவிழாக் காலங்களில் ஆழிக்கடலில் அடியார் கூட்டம் அலைமோதுகின்ற காட்சியைக் காண்பதே நம் துன்ப துயரங்களை எல்லாம் பறந்தோடச் செய்யும் மருந்து. அன்னை நாகபூஷணியின் மீது பக்தியும் சிரத்தையும் கொண்டு உருகி வழிபடும் அனைத்து அடியார்களுக்கும், மண்ணில் நல்லவண்ணம் வாழ நயினை அன்னை நல்லருள் புரிவாளாக!

*"பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும் பேணலாலன்னை பெற்றிடுவோர் உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும் உதவலாலன்னை எக்கலையும்*
*சொற்றதாலன்னை உலகொடு வானும் தொழுதலாலன்னை என்றென்றும்*
*பற்றதாங் கருணை பொழிதலாலன்னை, பராபரை நாகபூஷணியாள்!"*

**நயினை நா. க. குமாரசூரியர்**
(சமாதான நீதிவான், ஓய்வுநிலை அஞ்சலதிபர்)

## அகிலமெலாம் காத்தருள்வாய் அன்ன பூரணியே

அலைகடல் ஓரத்தில் அமைந்த நயினப் பதிவாழ் தாரணியே
அன்னபூரணியே அகிலாண்ட நாயகியே உன்னை நாடி வரும்
அடியவர்க்கு அஞ்சேல் என என அபயமளித்துக் காத்து
அருள் பாலித்திடும் அலங்கார பூசணியே தாரணியே இல்
அவனியெலாம் வளம் செழித்துக் கொழித்திடவும் புலி வாழ்
அன்பர்கள் தம் வாழ்வினிலே வசங்கள் வீசிடவும் நின்
அருள் வேண்டிப் நின் பாதமலர் பணிந்து தொழுதேத்துகிறோம்
அகிலமெலாம் காத்தருவாய் அமுத சுரபி நயினைத்தாயே

**சி. மகாலட்சுமி**
உரும்பிராய்

## தாயின் அழைப்பு

நள்ளிரவில் கடல் உறங்கும் நேரம்
நாகத்தாய் விழித்திருப்பாள்
மகனே வா, மகளே வா என்றே
மனதின் அலையில் அழைப்பாள்.

படகேறி வரும் பத்தர் கூட்டம்
பாதம் தொட்டதும் பாரம் இறக்கும்.
கண்ணீரில் கரைந்த வேண்டுதலை
கருணையில் கலந்து காப்பாள் என் தாய
வள்!

**தர்சன் கனிப்பிரியா**
போயிட்டி நீர்வேலி

## நயினைத் தாய்

கடல் நடுவே கோபுரம்,
கண்ணுக்கு விருந்து அது,
நாகம் சூடும் அன்னை இங்கு
நம்பி வந்தோரைக் காக்கும்.

அலையும். காற்றும் பாடும் போது
அம்மா பெயரே கேட்கும்
கண்ணீர்த் துளியும் தரையில் விழும் முன்
கருணை கொண்டு துடைப்பாள்

கவலை என்றும் இருளைக் கிழித்து
காலை ஒளி தருவாள்
நயினை நாகபூசணியே,
நீயே என் துணையே என் நிழலே அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# நவீல்ட் பாடசாலையில் சிறப்புற்ற தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஜுன்.15
கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் தமிழ் விழாக் கொண்டாட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. அதிபர் சுஜீவா வித்தியாசங்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் செவிப்புலன் சார்ந்த மாற்றுவலுவுள்ள மாணவர்களின் கலை ஆற்றுகைகள் இடம்பெற்றன. (சு-66)



# ஆன்மிகக் கட்டமைப்பு மூலம் 680 மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்.ஜுன் 15
உலக ஆன்மிக கட்டமைப்பு மூலம், 5 பாடசாலைகளைச் சேர்ந்த 680 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
மாங்குளம் சண்முகரத்தினம் வித்தியாலயம், பனிக்கன்குளம் அ.த.க. பாடசாலை, பெரியபுளியம்குளம் அ.த.க. பாடசாலை, கரிப்பட்டமுறிப்பு அ. த.க. பாடசாலை, கிளிநொச்சி அறிவியல் கல்வி நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த, 680 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
மலேசியாவைச் சேர்ந்த SRI MURUGAN Syarikat Sri Murugan Trading Agency Sdn Bhd நிறுவனத்தின் உரிமையாளர் நிதி அனுசரணை வழங்கியுள்ளார்.
உலக ஆன்மிகக் கட்டமைப்பு WSS அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை கணேஸ்குமார் ஒருங்கிணைப்பில், நல்லூர் சிவகுரு ஆதீனத் தலைவர் வேலன் சுவாமிகளின் பங்கேற்புடன் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க)



வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பராபவ வருட மஹோற்சவத் தேர்த் திருவிழா கடந்த சனிக்கிழமை காலை அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட கலைமன்றங்களுக்கிடையிலான கலை இலக்கியப் போட்டிகள் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன. இதன்போது பாரம்பரிய கூத்து இசைநாடகம் கிராமியப்பாடல் , கிராமிய நடனம், சாஸ்திரிக நடனம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. (ச-9)







சாவகச்சேரி சந்திர சேகர வாரிவனநாத சிவன் கோவில் பெருந்திருவிழாவின் கொடியேற்றம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ச-9)

# மாலைதீவுக்குச் செல்லவுள்ள யாழ்.மாணவிக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம்.ஜுன் 15
மாலைதீவில் நடைபெறவுள்ள தெற்காசிய ஸ்கேற்றிங் விரைவோட்டச் சம்பியன் போட்டியில் பங்கேற்கவுள்ள, யாழ்ப்பாண மாவட்ட மாணவி சாறுதி தர்மரூபனுக்கு, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் வாழ்த்துத் தெரிவித்தார். இந்தப் போட்டியில், யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் மாணவி சாறுதி தர்மரூபன் பங்கேற்கவுள்ளார். குறித்த மாணவி, யாழ்ப்பாண மாவட்டச் செயலரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். சந்திப்பில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கே. விஜிதரன், விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எல். அநுரகாந்தன், டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் எஸ். ஜெபநேசன் மற்றும் மாணவியின் தாயார் திருமதி சிவசங்கரி தர்மரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திறைசேரியின் 2.5 மில்லியன் மாயம்

# மோசடி நடந்து 8 மாதங்களாகியும் நாடாளுமன்ற அறிக்கை இல்லை

கொழும்பு, ஜூன் 15

இலங்கைத் திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மோசடி செய்யப்பட்டு தற்போது 8 மாதங்களுக்கும் மேலாகியுள்ள போதிலும், அது தொடர்பான எந்தவொரு விசாரணை அறிக்கையையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கச் சட்டவாக்க சபை தவறியுள்ளதாக சுதந்திர சட்டத்தரணிச் சங்கம் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், கடுமையான பொருளாதார நெருக்கடிக்குப் பிந்தைய மிக முக்கியமான கடன் மறுசீரமைப்புக் காலகட்டத்தில் இலங்கை தற்போது உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் முக்கியமான நிபந்தனையின்படி, இதுவரை காலமும் இலங்கை மத்திய வங்கியால் மிகக் கவனமாக மேற்கொள்ளப்பட்டு வந்த அரசாங்கத்தின் ஒட்டுமொத்த கடன் முகாமைத்துவப் பணிகள், திறை சேரியின் கீழ் புதிதாக நிறுவப்பட்ட 'பொதுக்கடன் மேலாண்மை அலுவலகம்' என்ற புதிய நிறுவனத்திடம் உத்தியோக பூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் பெற்றுக்கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை உரிய நேரத்தில், சரியான தரப்பினருக்குத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் அவற்றின் கணக்கு அறிக்கைகளைத் துல்லியமாகப் பேணுதல் ஆகிய எளிய செயல்முறையே கடன் முகாமைத்துவமாகும்.

இந்த உத்தியோகபூர்வ நிதிப் பொறுப்புகள் மத்திய வங்கியிலிருந்து திறைசேரியின் புதிய அலுவலகத்திற்கு மாற்றப்படும் இடைமாறுகாலத்தின் போது), முறையான கட்டுப்பாட்டு வழிமுறைகளோ அல்லது பாதுகாப்பு நெறிமுறைகளோ பின்பற்றப்படவில்லை.

இதன் காரணமாக இரு பிரதான நிதி நிறுவனங்களுக்கும் இடையே ஏற்பட்ட நிர்வாக முரண்பாடுகளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சர்வதேச மோசடிக்காரர்கள், தந்திரமான முறையில் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் அரசாங்கப் பணத்தை வெளிநாட்டுக் கணக்குகளுக்கு மாற்றியுள்ளனர். இது வெறும் சாதாரண தொழில்நுட்பக்கோளாறு கிடையாது. நாட்டின் மிக உயர் நிதி நிர்வாக அமைப்பில் நிலவும் கடுமையான உள்கட்டமைப்புக் குறைபாடுகளின் நேரடி விளைவாகும். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த விவகாரத்தின் போது ஒரு உயர் அதிகாரியின் உயிரே பலியாகியுள்ளது.

எனவே, இந்தத் துயரச் சம்பவம் வெறும் நிதி இழப்புடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதொன்றல்ல; இதன் பின்னணியில் உள்ள மர்மங்கள் நாடாளுமன்றத்துக்கு வெளிப்படுத்தப்படவேண்டும். திறைசேரியின் இத்தகைய பலவீனமான பாதுகாப்புப் பொறிமுறை சர்வதேச ரீதியில் நாட்டின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குறியாக்கும் என்பதால், உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ச-இ)





## வாக்களித்த மக்களை ஏமாற்றுவது தவறு!

விஜயதாச தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

தமது அரசாங்கத்தை அசைக்கமுடியாது எனக் கூறியவர்கள் எல்லாம் இரு வருடங்களுக்குள் வீடு செல்ல நேரிட்டது என்பதை மறந்துவிடக்கூடாது என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 ஆண்டுகளுக்கு எம்மை அசைக்கமுடியாது என இந்த அரசாங்கம் மட்டும் அல்ல, இதற்கு முன்னர் இருந்த அரசும் கூறியது. ஆனால் பதவிக்கு வந்து இரு ஆண்டுகளுக்கு முன்னரே வீட்டுக்கு செல்லநேரிட்டது.

இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்கள், சட்டம், நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படும் எனக் கருதினர். ஆனால் அதுகூட நடக்கவில்லை. நீதிமன்றக் கட்டமைப்பைச் சீர்குலைப்பதற்கு ஆட்சியாளர்கள் முற்படுகின்றனர் - என்றார். (ச-44)

## 'சாலே' விவகாரத்தைக் கையிலெடுத்து பொருளாதார நெருக்கடி மூடிமறைப்பு

இம்ரான் எம்.பி. சுட்டிக்காட்டு



திருகோணமலை, ஜூன் 15

நாட்டின் தற்போதைய பிரதான பிரச்சினையாக பொருளாதார நெருக்கடி உருவெடுத்துள்ள நிலையில், அதனை மூடிமறைப்பதற்காக அரசாங்கமும் ராஜபக்ச தரப்பினரும் இணைந்து அரங்கேற்றும் ஒரு கூட்டு நாடகமாகவே 'சாலே' விவகாரத்தை பார்க்கவேண்டும் என என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலானது, இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு இடப்பட்ட அடித்தளமாகும். அரசியல் இலாபத்துக்காக நடத்தப்பட்டதாகப் பல்வேறு விசாரணைக ளின் மூலம் தெரியவரும் இந்தப் பயங்கரவாதத் தாக்குதலால், முதலாவதாகப் பயனடைந்தவர்கள் ராஜபக்சக்களும் பொதுஜன பெரமுனவினருமாவர். அதன் பின்னரான சூழலில், இந்த விடயத்தை மையப்படுத்தி அதிகாரத்துக்கு வந்தவர்கள் தேசிய மக்கள் சக்தியினர் ஆவர். இன்று நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை தலை தூக்கியிருக்கும் சூழலில், அதனை மூடி மறைப்பதற்காகவே இந்த அரசாங்கம் 'சாலே' விவகாரத்தை ஒரு பிரதான கதாநாயகனாக்கி அரசியல் இலாபமடைந்து வருகிறது. பொதுஜன பெரமுனவும் அவர்களது சகாக்களும் மீண்டும் இனவாதத்தைத் தூண்டி, இந்த விவகாரத்தை வைத்து மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இதனால், நாடு பொருளாதார ரீதியில் அதலபாதாளத்துக்குள் செல்லும் வரை இந்த இரு தரப்பும் இத்தகைய தொடர் நாடகங்களை அரங்கேற்றவே போகிறார்கள்- என்றார். (ச-இ)

## வாகன இறக்குமதிச் செலவு 3.9 மில்லியன் டொலராகக் குறைப்பு!

பிரதியமைச்சர் அனில் ஜயந்த தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 15

இலங்கையின் நாளாந்த வாகன இறக்குமதிச் செலவு 3.9 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2025ஆம் ஆண்டில் சாதாரண பொருளாதார நிலைமைகளின் கீழ், வாகன இறக்குமதிக்கான நாளாந்தச் செலவு சராசரியாக 5.27 மில்லியன் டொலராகக் காணப்பட்டது. எனினும், வாகனங்களுக்கான பொதுமக்களின் அதீத தேவை மற்றும் நாட்டின் பொருளாதார எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற தன்மை காரணமாக, ஒரு கட்டத்தில் இந்த நாளாந்த இறக்குமதிச் செலவு மிக மோசமாக உயர்ந்து, ஒரு நாளைக்குச் சராசரியாக 6.8 மில்லியன் டொலர் என்ற அதிஉச்ச நிலையை எட்டியது. தேவையற்ற வாகன இறக்குமதிகளை தற்காலிகமாகக் கட்டுப்படுத்துமாறு பொதுமக்களிடம் அரசாங்கம் நேரடிக் கோரிக்கை விடுத்திருந்தது. அத்துடன், நாட்டிற்குள் நுழையும் வாகனங்களின் அளவைத் துல்லியமாகக் கட்டுப்படுத்துவதற்கான விசேட நிதிமுகாமைத்துவப் பொறிமுறைகளையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டங்கள் தற்போது மிகச்சிறந்த பலனைத் தரத் தொடங்கியுள்ளன. இதற்கமைய, நடப்பு ஜூன் மாதத்தின் பொது விடுமுறை நாள்களைத் தவிர்த்த முதலாவது 8 வேலை நாள்களில், வாகன இறக்குமதிக்காக இலங்கை ஒட்டுமொத்தமாக 31.72 மில்லியன் அமெரிக்க டொலரை மட்டுமே செலவிட்டுள்ளது. இதன்மூலம் நாளாந்தச் சராசரி செலவு 3.9 மில்லியன் டொலராகக் குறைந்துள்ளது- என்றார். (ச-இ)

## நாட்டைப் பாதுகாக்க எதிரணி கூட்டிணைக!

வேலுகுமார் தெரிவிப்பு

கண்டி.ஜூன் 15


எமது நாட்டை பாதுகாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதற்காக எமது எதிரணித் தலைவர்கள் ஒன்றுபடவேண்டும் என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார். கண்டியில் நடைபெற்ற கூட்டு எதிரணியின் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்து வரும் சில மாதங்களில் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு விரட்டி யடித்து, நாட்டுக்கு சுபீட்சமான அரசாங்கத்தை கூட்டு எதிரணியாக உருவாக்குவோம். தேசிய வளங்களைப் பாதுகாப்போம் எனக்கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள், கண்டி மாவட்டத்தில் தோட்டங்கள் ஏலம்போட்டு விற்பனை செய்துவருகின்றனர். காணி மட்டும் அல்ல தொழிற்சாலைகளும் விற்பனை செய்யப்படவுள்ளன. எனவே, நாம் இதற்கு எதிராக போராட வேண்டும் - என்றார். (ச-44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



100 நாள்களின் பின்

# அமெரிக்காவின் சுதந்திர தினத்தில் ஈரான் உச்சத்தலைவரின் இறுதிச்சடங்கு!

ஈரான் அறிவிப்பு

தெஹ்ரான்,ஜூன் 15

ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் இறுதிச்சடங்கு ஊர்வலங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி முதல் தொடங்கும் என ஈரான் அரசு ஊடகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி 28 அன்று அமெரிக்க - இஸ்ரேல் வான்வழித் தாக்குதலில் அலி கமேனி கொல்லப்பட்டு, 100 நாள்களுக்கு மேல் கடந்தும் மீண்டும் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தில் இறுதிச்சடங்குகள் தள்ளிவைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் அமெரிக்கா தனது 250 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் அதே ஜூலை 4ஆம் திகதியன்று இந்த இறுதிச்சடங்குகளை நடத்த ஈரான் திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய ஜூலை 4 ஆம், 5ஆம் திகதிகளில் தலைநகர் தெஹ்ரானில் உள்ள பிரம்மாண்டமான 'இமாம் கொமேனி முசல்லா' வழிபாட்டுத் தலத்தில் பொதுமக்கள் மற்றும் சர்வதேசத் தலைவர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக கமேனியின் உடல் வைக்கப்படும்.

ஜூலை 6 ஆம், 7 ஆம் திகதிகளில் தலைநகர் தெஹ்ரான் மற்றும் ஈரானின் ஆன்மிகப் புனித நகரமான 'கோம்' ஆகிய பகுதிகளில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கும் பிரம்மாண்ட இறுதி ஊர்வலங்கள் நடைபெறும்.

ஜூலை 9 ஆம் திகதி வடகிழக்கு நகரமான மஷாத் நகரில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற 'இமாம் ரெசா' புனிதத் தலத்தில் கமேனியின் உடல் இஸ்லாமிய மதச் சடங்குகளுடன் முறைப்படி அடக்கம் செய்யப்படும்.

இஸ்லாமிய விதிகளின்படி இறந்தவர்களின் உடலை 24 மணி நேரத்திற்குள் அடக்கம் செய்ய வேண்டும் என்ற விதியிருந்தும், போர்க்கால விதிவிலக்கின் அடிப்படையில் ஈரான் இதைத் தள்ளிப்போட்டது. கமேனியின் இறுதிச்சடங்கில் நாட்டின் ஒட்டுமொத்த உயர்மட்ட இராணுவத் தளபதிகள், அரசியல் தலைவர்கள் மற்றும் இலட்சக்கணக்கான மக்கள் ஒரே இடத்தில் கூடும்போது அமெரிக்க அல்லது இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல் நடந்தால் ஒட்டுமொத்த அரசாங்கமும் அழிந்துவிடும் என்ற உளவுத்துறை எச்சரிக்கையாலேயே கமேனியின் உடல் இரகசிய இடத்தில் இதுவரை பாதுகாக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# அமெரிக்கா - ஈரான் ஒப்பந்தம் ஈரானில் மக்கள் போராட்டம்!

தெஹ்ரான்,ஜூன்.15

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தத்தில் ஈரான் சில இரகசியச் சமரசங்களை மேற்கொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டி, ஈரானிய மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமெரிக்காவுடனான அமைதி ஒப்பந்தத்திற்கு ஈரான் அரசு சம்மதித்துள்ள செய்தி வெளியானதைத் தொடர்ந்து, ஈரானிய மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். ஈரானின் வடகிழக்கு நகரான மஸ்ஸாத் நகரில் அமைந்துள்ள வெளிநாட்டு விவகாரங்களுக்கான அமைச்சு அலுவலகத்தை ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் போராட்டக்காரர்கள் நேற்று முற்றுகையிட்டனர். கைகளில் அமெரிக்க எதிர்ப்பு மற்றும் புரட்சிகரக் கொள்கைகளைக் குறிக்கும் கறுப்பு, சிவப்பு நிறக் கொடிகளை ஏந்தியவாறு, பெருமளவிலானவர் இந்தப் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து ஈரான் அரசு தனது சுயமரியாதையை விட்டுக்கொடுத்துள்ளது" எனக் குற்றஞ்சாட்டி, ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி மற்றும் நாடாளுமன்ற சபாநாயகர் காலிபாப் ஆகியோர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனப் போராட்டக்காரர்கள் முழக்கமிட்டனர். நாட்டின் இறையாண்மையை அமெரிக்காவிடம் அடகு வைத்ததற்காக அவர்கள் இருவருக்கும் ஈரானியச் சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் குரலெழுப்பினர்.



இந்த அமைதி ஒப்பந்தத்தின் முழு விபரங்களும் மக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் கோரிக்கை முன்வைத்தனர். (ச-இ)

# கொங்கோ அகதிகள் முகாமில் எபோலா தொற்றுக்கு 2 பேர் பலி

கொங்கோ,ஜூன்.15

ஆபிரிக்க நாடான கிழக்கு கொங்கோவில் அமைந்துள்ள உள்நாட்டு அகதிகள் முகாம் ஒன்றில் எபோலா வைரஸ் தொற்றுப் பாதிப்பால் இரண்டு பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகாம் அறிவித்துள்ளது.

மக்கள் தொகை மிக நெருக்கடியாகக் காணப்படும் அகதிகள் முகாமிற்குள் இந்தத் தொற்று பரவத் தொடங்கியுள்ளதால், சர்வதேச அளவில் பெரும் சுகாதார அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள இந்த அகதிகள் முகாம்களில் மக்கள் மிகவும் கொத்துக் கொத்தாகவும், நெருக்கடியாகவும் வசித்து வருகின்றனர். இதனால், எபோலா நோய் அறிகுறிகள் தென்படும் நபர்களை ஏனையவர்களிடமிருந்து தனியாகப் பிரித்து, தனிமைப்படுத்துவது தற்போதைய சூழலில் சாத்தியமற்ற ஒன்றாகக் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# அசாமில் விமான விபத்து 5 படைவீரர்கள் உயிரிழப்பு!

இந்தியா,ஜூன் 15

இந்தியாவின் அசாம் மாநிலம் ஜோர்ஹட் பகுதியில் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான ஏ-என்.32 ரக போக்குவரத்து விமானம் தரையிறங்க முயன்றபோது கோர விபத்துக்குள்ளானதில் நேற்றுமுன்தினம் விமானப்படையைச் சேர்ந்த 5 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ரஷ்ய தயாரிப்பான ஏ.என்.32 ரக விமானங்கள் இந்திய இராணுவத்தின் மிக முக்கியமான போக்குவரத்துப் பிரிவாக விளங்கி வருகின்றன.

இந்த நிலையில், இரண்டு எஞ்சின்களும் இயங்கிய நிலையிலும் தரையிறங்கும் போது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதா அல்லது மோசமான கால நிலை காரணமாக இந்த விபத்து நிகழ்ந்ததா? என்பது குறித்து கண்டறிய இந்திய விமானப்படை உயர்மட்ட நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. (ச-இ)





# லண்டனில் கத்திக்குத்து இந்தியர் சாவு

லண்டன்,ஜூன்.15

லண்டனில் சவுத்தாலில் உள்ள டார்மர்ஸ் வெல்ஸ் வீதியில் நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் 26 வயதான இந்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலு 30 வயது மதிக்கத்தக்க மற்றொரு நபரும் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் 20 முதல் 30 வயதுக்குட்பட்ட ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஓராண்டு நினைவஞ்சலி அழைப்பு

கடந்த 27.06.2025 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் றொபின்சன் புனிதராணி (உமா)

தோற்றம் 11.06.1981 மறைவு 27.06.2025



அவர்களின் முதலாம்
ஆண்டு நினைவு தினம்
நாளை (16.06.2026)
செவ்வாய்க்கிழமை
முற்பகல் 11.00
மணியளவில் அவரது
இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும்
தங்கள் குடும்பசகிதம்
வருகைதந்து
அன்னாரின்
ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும்,
அதனைத்தொடர்ந்து
நடைபெறும் மதியபோசன
நிகழ்விலும்
கலந்துகொள்ளும்
வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
காளிகோவிலடி
தாவடி தெற்கு, கொக்குவில்.

(CS/61662) N


# வடக்கு மாகாண கரம் போட்டியில் வேலணை மாணவிக்குச் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாணமட்ட திறந்த கரம் போட்டியில், யாழ்.மாவட்ட அணி சார்பில் ஒற்றையர் ஆட்டத்திலும், குழுப்போட்டியிலும் பங்குபற்றிய வேலணை மத்திய கல்லூரி மாணவி ஜெ.விதுர்ஷினி, இந்த வருடத்துக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிகளில் இவர் சம்பியனைப் பெற்றுள்ளார். மாவட்ட கரம் போட்டியில் வேலணைப் பிரதேச செயலகம் சார்பில் பங்குபற்றிய இவர், யாழ் மாவட்ட அணியில் இடம் பிடித்து மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். தற்போது வடமாகாணஅணியில் வெற்றி பெற்று, தேசியமட்ட போட்டிக்குத்தெரிவு செய்யப்பட்டுள்ளார். கரம் போட்டியில் தீவக மண்ணைச் சார்ந்த வீரரொருவர் வடமாகாண அணியில் பங்கேற்று, தேசியமட்டப்போட்டியில் கலந்து கொள்வது இதுவே முதற்தடவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



முன்னாள் மல்லாகம் நீதிமன்ற உத்தியோகத்தரும், முன்னாள் மல்லாக சன்மார்க் சனசமூக நிலைய தலைவரும், முற்போக்கு வாதியும், ஓய்வுபெற்ற யாழ் போதனா வைத்தியசாலை முகாமைத்துவ உத்தியோகத்தரும், பிரபல சிங்களப் பாட ஆசிரியருமான

அமரர்
## பெஞ்சமின் ரஞ்சன்

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்.

(cr 61586) N-1

குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்



தோற்றம் 27.04.1955 மறைவு 11.06.2026

நான் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்;
என்னை விசுவாசிக்கின்றவன் மரித்தாலும் பிழைப்பான்"
(யோவான் 11:25)

## தம்பிமுத்து தனபாலரத்தினம் (லேத்தர்)

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை உயரப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து தனபாலரத்தினம் அவர்கள் (11.06.2026) வியாழக்கிழமை உயரப்புலம் ஆனைக்கோட்டையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தேவமலர் (சறோசா) அவர்களின் அன்பு கணவரும், சனிஸ்ரன் (கனடா), சாளினி (லண்டன்), பகிதரன் (லண்டன்), சாமினி (மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை - ஆசிரியர்), சர்மிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுலன் (லண்டன்), றொனிமில் (ஆசிரியர்), ஸரீபனா (லண்டன்), றொபின்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஞ்சயன், தேனுஜா, சகீனா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், ராணி, ரதி, சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நடராசா, ஐயாத்துரை, சுப்பிரமணியம், தேவதாஸ், அமலதாஸ், விமலதாஸ், பத்மினி யோகேஸ்வரி, மனோன்மணி, தவமணிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.06.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்

இல.9, உயரம்புலம் வீதி,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 180 1614
076 615 1837

(cs 61664) N


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மாகாணமட்ட கூடைப்பந்தாட்டம் சென். பற்றிக்ஸ் மூன்றாமிடம்!

யாழ்ப்பாணம்,ஜூன் 15
மாகாணமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மூன்றாமிடம் பெற்றுள்ளது.
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையேயான கூடைப்பந்தாட்டப் போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.
இதில் 17 வயதுக்குட்பட்டோருக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வேலணை மத்திய கல்லூரியை 37:18 என்ற புள்ளிகள் விகிதத்தில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ச)

# வாசனைத் திரவியங்கள் தொழில்நுட்பப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன் 15
ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் வாசனைத் திரவியங்கள் தொடர்பான செயற்பாட்டுத் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிநெறி யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது
யாழ்ப்பாண மாவட்டத்தின் பாரம்பரிய மாகக் காணப்படும் அவ் வாசனைத் திரவியங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான பயிற்சிநெறியாக இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
நிகழ்வில் யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தை எவ்வாறு கட்டி எழுப்பலாம்,அதன் முக்கியத்துவத்தை எவ்வாறு மீள ஒழுங்கு செய்யலாம் வாசனைத் திரவியங்களைத் தெரிவு செய்தல் மற்றும் பதப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் வளவாளர்களாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வடக்கு மாகாண உதவிப் பணிப்பாளரும் மாகாண பிராந்திய இணைப்பாளருமான க. கனோஜன், தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் பொறுப்பதிகாரி நா.சோமநாத் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)





# பாரம்பரிய உணவகம் கண்டாவளையில் திறப்பு

கிளிநொச்சி, ஜூன் 15
பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும்,கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் 7 மில்லியன் ரூபா செலவில் கண்டாவளை பிரதேச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட பாரம்பரிய உணவகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன், மாகாண காணி ஆணையாளர் இ.குருபரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி அஜிதா பிரதீபன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மோகனபவன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பாரம்பரிய உணவகத்தினை திறந்துவைத்தனர். குறித்த பாரம்பரிய உணவகமானது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அல்லாது பொதுமக்களும் பயன்பெறக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஈழத்துச் சின்னக்குயிலுக்கு யாழில் உற்சாக வரவேற்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 15
இந்தியத் தொலைக்காட்சியின், மாபெரும் இசைப் போட்டியில், இறுதிச் சுற்றில் முதல் 5 இடங்களுக்குள் தெரிவான, திருகோணமலை முகத்துவாரம் பிரதேசத்தைச் சேர்ந்த ஈழத்துச் சின்னக்குயில் சசிதரன் வர்ஜாவுக்கு யாழில் நேற்று வரவேற்பளிக்கப்பட்டது.
பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் ஊடாக வருகைதந்த வர்ஜாவுக்கு, உற்சாகமான வரவேற்பளிக்கப் பட்டது. (க-66)

# தேசிய படகு வலித்தல் போட்டியில் நெடுந்தீவு ம.வி. அணி முதலிடம்

யாழ்ப்பாணம்,ஜூன் 15
தேசியமட்ட படகு வலித்தல் போட்டியில், நெடுந்தீவு மகா வித்தியாலய அணியினர் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.
18 வயதின் கீழ்பிரிவு மாணவர்களுக்கான தேசியமட்ட படகு வலித்தல் போட்டி கொழும்பு துறைமுக நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் நெடுந்தீவு மகாவித்தியாலய அணியினர் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். இந்தப் போட்டியில் கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா கல்லூரி இரண்டாம் இடத்தையும், ஊர்காவற்றுறை தம்பாட்டி அ.த.க. வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம்...

**காணி விடுவிப்பில் அலட்சியம்**

வலி.வடக்கில் இன்னமும் சுமார் 2 ஆயிரத்து 300 ஏக்கர் பொதுமக்களின் காணிகள் இராணுவத்தின் பிடியிலேயே இருக்கின்றன. அந்தக் காணிகளில் மீளக்குடியமர சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் காத்திருக்கின்றன.
2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் முறையே 2,300 ஏக்கர் மற்றும் 2,350 ஏக்கர் எனப் பெருமளவு நிலங்கள் விடுவிக்கப்பட்டதாகக் காட்டப்பட்டாலும், அதன் பின்னர் வந்த ஆண்டுகளில் (2015-2025 வரை) விடுவிக்கப்பட்ட நிலங்களின் அளவு மிகக் சொற்பமானதே. 2025 ஆம் ஆண்டில் வெறும் 35 ஏக்கர் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது என்பது, மீள்குடியேற்ற விடயத்தில் அரசாங்கம் காட்டும் அலட்சியத்தின் உச்சமாகும். அதைவிடவும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வலி.வடக்கில் உள்ள மக்களின் காணிகளில் இராணுவத்தினரின் உதவியுடன் சட்டவிரோதமான கட்டுமானங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டவிரோதமாக மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகளைத் தடுப்பதிலும் அரசாங்கம் தயக்கம் காட்டிவருகின்றமையும் மக்களுக்கு அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்திருக்கின்றது.

**ஆண்டு அனுபவிக்கும் இராணுவம்**

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அந்த நிலங்களில் படையினர் விவசாய நடவடிக்கைகளிலும், வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவது பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களில் ஆறாத வடுவாக மாறியுள்ளது.
கட்டுவன் (ஜே/238), குரும்பசிட்டி (ஜே/242, ஜே/243), மயிலிட்டி வடக்கு (ஜே/246), மயிலிட்டித்துறை தெற்கு (ஜே/248), பலாலி தெற்கு (ஜே/252), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254), பலாலி வடமேற்கு (ஜே/255) மற்றும் காங்கேசன்துறை மத்தி (ஜே/234) ஆகிய பகுதிகளில் படையினர் தொடர்ந்தும் விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர்.
அதேநேரம், காங்கேசன்துறை மற்றும் பலாலி பகுதிகளில் தல்செவன விடுதி, இராணுவ நலன்புரி நிலையங்கள், உணவகங்கள் மற்றும் கடைகள் என இராணுவத்தினர் தமது வணிக சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தியுள்ளனர். தல்செவன விடுதி, சோழன் கடை, விமானப்படையினரின் ஹொட்டல் எனப் பல இடங்களில் பூர்வீக நிலங்கள் வணிகமயமாக்கப்பட்டுள்ளன.

**பொது இடங்கள் ஆக்கிரமிப்பு**

வலி.வடக்கு மக்களின் கலாசார அடையாளம் சுமந்த இடங்கள் பலவும் இன்னும் விடுவிக்கப்படாமலேயே உள்ளன. மயிலிட்டி பகுதியில் காணிக்கை மாதா தேவாலயம், மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் மற்றும் பல்வேறு ஆலயங்கள் இன்னமும் படையினர் கட்டுப்பாட்டிலேயே அல்லது விடுவிக்கப்பட வேண்டிய பகுதிகளிலேயே உள்ளன. காங்கேசன்துறை, பலாலி எனப் பல கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகள், பொதுச் சந்தைகள் மற்றும் வணக்கஸ்தலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. 6க்கும் மேற்பட்ட பாடசாலைகள், 20க்கும் மேற்பட்ட ஆலயங்கள் இன்னமும் விடுவிக்கப்படாதுள்ளன.
கே.கே.எஸ். காபர் கீரிமலை வீதி, கட்டுவன் சந்தி வசாவிளான் சந்தி வரையான வீதி, விமான நிலையச் சந்தி வரையான விமான நிலைய வீதி, முலவைச் சந்தி ஐயர்வீட்டுச் சந்தி வீதி என்பனவும் இன்னமும் விடுவிக்கப்படாது மூடப்பட்டுள்ளன.
பலாலி படைத்தளத்துக்கு வெளியே மட்டும் 7 முகாம்கள் இயங்கி வருகின்றன. அதில் தல்செவன முகாம், வாகன சுத்திகரிப்பு நிலையம் (ஜே/234), 511ஆவது பிரிகேட் தலைமையகம் (ஜே/244) மற்றும் இராணுவ பொலிஸ் முகாம் (ஜே/246) எனப் பிரதான இடங்கள் அனைத்தும் படையினர் வசம் உள்ளன.
சொந்த நிலத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 37 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இனியாவது தங்களது காணிகளை ஒப்படைக்க வேண்டும் என்று வலி.வடக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரசாங்கம் இந்த விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி விரைவான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-எ-26)

## நயினாதீவு...

டன் ஆரம்பமாகும். தொடர்ந்து 15 தினங்கள் காலை, மாலை உற்சவங்கள் இடம்பெறும்.
எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை திருமஞ்சத் திருவிழாவும், 27 ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 29 ஆம் திகதி திங்கட்கிழமை கங்காதரணியில் தீர்த்தோற்சவமும், 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தெப்போற்சவமும் இடம்பெறும். (அ-க-66)

## இன,...

நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்தப் பகுதி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர்கள் சுதந்திரமாகவும் சந்தோசமாகவும் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதே எனது பிரதான நோக்கம். நாட்டில் சாதாரண மக்களுக்கு ஒரு நீதியும், பிரபலமானவர்களுக்கு ஒரு நீதியும் இருக்காது. அனைவருக்கும் ஒரே மாதிரியான நீதியே நிலைநாட்டப்படும்.
கட்சி, மத பேதங்கள் இல்லாத, அனைவரும் ஒரே இனமாக வாழும் சூழலையே உருவாக்கி வருகிறோம். இனிவரும் காலத்தில் நாட்டில் மீண்டும் ஒரு முறுகல் நிலை ஏற்படுவதற்குச் சாத்தியமில்லை. எதிர்காலச் சந்ததியினர் நல்லிணக்கத்துடன் வாழ்வதை உறுதி செய்ய வேண்டும்; தவறினால் பிரிவினைவாதம் வளர அது வழிவகுத்துவிடும்.
வடக்கு மாகாண மக்கள் பொலிஸாருடன் சுமுகமாகத் தொடர்புகொள்வதற்காகப் பொலிஸ் நிலையங்களின் மொழிபெயர்ப்புச் சேவைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது நடைபெற்று வரும் பொலிஸ் ஆள்சேர்ப்பில் வட பகுதி இளைஞர், யுவதிகள் இணைந்து இந்தச் சேவையை வலுப்படுத்த வேண்டும்-என்றார். (அ-எ-26)

## செம்மணி...

மற்றும் ஒரு குழந்தையின் என்புக்கூடு உட்பட மொத்தம் 7 என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
நேற்று அடையாளம் காணப்பட்ட என்புக்கூடுகளுடன், செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித என்புக் கூட்டுத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 355 ஆக உயர்ந்துள்ளது. அவற்றில் 341 மனித என்புக்கூடுகள் இதுவரை முழுமையாக வெளியே எடுக்கப்பட்டுள்ளன.
நேற்று நடந்த அகழ்வுப் பணிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் பங்கேற்றிருந்தனர். சான்றுப் பொருள்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தப் பகுதியில் தொடர்ந்து அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று சட்டத்தரணி கை.சுபாகர் தெரிவித்தார்.
நீதவான் நஜ்மி ஹுசைன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ சோமதேவா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றனர். (அ-எ-26)

## மீள்குடியமர்வை...

பகுதியில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 17 ஆண்டுகள் கடந்துள்ளபோதும், அந்தப் பகுதி மக்கள் இன்னமும் முழுமையாக மீள்குடியமர்த்தப்படவில்லை. அவர்களின் சொந்த வாழ்விடங்கள் உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு, தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.
தமது சொந்த இடங்களில் மீள்குடியமர அனுமதிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை மேற்கொண்டுவந்தபோதும், ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அதை அலட்சியம் செய்திருந்தன. தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கமும் மீள்குடியமர்வு விடயத்தில் அசமந்தப் போக்கையே காட்டும் நிலையில், மக்கள் இன்று போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளனர்.
பலாலிச் சந்தியில் உதயவாணி மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் காலை 8 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரை போராட்டம் நடத்தப்படவுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக வயாவிளான் மக்கள் பெரும் போராட்டம் ஒன்றை இன்று காலை ஏற்பாடு செய்துள்ளனர். (அ-எ-26)

## அரச...

பெற்றுக்கொண்டார்.தையிட்டியில் பொது மக்களின் காணிகள் அடாத்தாகப் பிடிக்கப்பட்டு விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தங்களின் பூர்வீகக் காணிகளை மீளப் பெறுவதற்காக அந்த மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஆயினும் பொலிஸாரின் துணையுடன் விகாராதிபதி, அந்தப் போராட்டங்களை தடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார் என்று பாதிக்கப்பட்ட மக்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.
இந்தநிலையில், பொதுமக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையின் விகாராதிபதி அரச நிகழ்வுகளுக்கு அழைக்கப்படுவது பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. சட்டத்துக்கு முரணாகச் செயற்படுபவர்களுக்கு வழங்கப்படும் கௌரவிப்பு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையைச் சிதைக்கின்றது என்று பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-எ-26)

## மாயமான...

பான விசாரணை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய முக்கிய பிரதானிகள் சிலர் விசாரணைக்கு வரவழைக்கப்படவுள்ளனர் என்று சிங்கள இணைய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.
இந்த வாக்குமூலங்களின் மூலம் வெளிப்படும் தகவல்களின் அடிப்படையில், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளையும் விசாரணைக்காக அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடமும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வாக்குமூலம் பெற்றுள்ளது என தெரியவருகின்றது.
தங்கம் கண்டெடுக்கப்பட்ட காலப்பகுதியில் தான் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரியாக கடமையாற்றியதால், அந்த விவரங்கள் தனக்குத் தெரியாது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். கே.பி வசம் இந்தத் தங்கத் தொகை இருந்துள்ளதுடன், அவர் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதன் பின்னர், அந்தத் தங்கம் அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்தபோதே காணாமல்போயுள்ளது என்ற குற்றச்சாட்டுகள் கடந்தகாலங்களில் சுமத்தப்பட்டிருந்தன. (அ-எ-44)

## மாகாணத்...

குழுவின் இறுதி அறிக்கை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அதன் தலைவர், அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். எல்லை நிர்ணய ஆய்வுக் குழு தனது அறிக்கையை உரிய காலத்தில் சமர்ப்பிக்காததால் தற்போதைய தேர்தல் முறையில் சட்ட முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.
இந்தச் சிக்கலைத் தீர்க்க, பழைய தேர்தல் முறைக்கு திரும்புவது அல்லது பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கிய முற்றிலும் புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவது உட்பட 4 மாற்று வழிகளை சட்டமா அதிபர் முன்வைத்துள்ளார்.
வெறும் நாடாளுமன்ற பிரேரணை மூலம் பெண்களுக்கான கட்டாய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய முடியாது என்பதால், புதிய சட்டவரைவே இதற்குரிய தீர்வாக அமையும் என விளக்கமளிக்கப்பட்டுள்ளது.
அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான தெரிவுக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. தெரிவுக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன், புதிய சட்டவரைவு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேர்தலுக்கான வழிமுறைகள் இறுதி செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெலோ கட்சித் தலைமையால் அதிகார துஷ்பிரயோகங்கள்

## மூத்த உறுப்பினர்கள் போர்க்கொடி!

**யாழ்ப்பாணம்,ஜூன் 15**

**கட்சித் தலைமையின் தன்னிச்சையான அரசியல் தீர்மானங்கள், நிர்வாகச் சீரின்மை, தொடர்ச்சியான தேர்தல் தோல்விகள் மற்றும் தவறான கூட்டணிகள் காரணமாக ரெலோ இயக்கம் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குச் சரிவைச் சந்தித்துள்ளது என்று தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ கட்சியின் மூத்த போராளிகள் மற்றும் கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, கட்சியின் மூத்த உறுப்பினர்கள் இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தங்களது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கட்சியின் தேசிய மாநாட்டை மிகவும் இரகசியமாக நடத்துவதற்குத் தற்போதைய தலைவரும் செயலாளரும் திட்டமிட்டுள்ளனர்.

கட்சித் தலைமையின் தன்னிச்சையான அரசியல் தீர்மானங்கள் காரணமாக ரெலோ இயக்கம் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குச் சரிவைச் சந்தித்துள்ளது. இதன் காரணமாகக் கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் கடும் அதிருப்தியடைந்து, பலர் கட்சியிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

வவுனியாவில் கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எமது கடுமையான எதிர்ப்பையும் மீறி, தங்களது பதவிகள் பறிபோய்விடும் என்ற பீதியில் தேசிய மாநாட்டைத் தன்னிச்சையாகப் பிற்போடத் தலைமை தீர்மானித்தது.

கடந்த ஏப்ரல் திருகோணமலையில் நடந்த கூட்டத்தில் ஏற்கனவே முறைப்படி எட்டு மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட தெரிவுகளை இரத்துச் செய்து, புதிதாகத் தமக்குச் சாதகமான பொதுக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யத் தீர்மானித்தனர். இது கட்சியின் யாப்புக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் முரணான அடிப்படை உரிமை மீறலாகும்.

அண்மையில் மன்னார் மற்றும் முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய ஆறு மாவட்டங்களிலும் தலைவரும், செயலாளரும் இரகசியமாகத் தமக்கு ஆதரவானவர்களை மட்டும் அழைத்து புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளனர். இது தங்களது பதவி வெறியைத் தக்கவைக்கச் செய்யும் அதிகார துஷ்பிரயோகம் ஆகும்.

தற்போது பதவியைத் தக்கவைப்பதற்காகத் தலைவரும் செயலாளரும் இணைந்து அடிமட்டச்சதிகளில் ஈடுபட்டு வருவதே கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இன்றைய பிளவுகளுக்கும் முரண்பாடுகளுக்கும் பிரதான காரணமாகும். இதற்குத் தலைவரும் செயலாளருமே முழுமையாகப் பொறுப்புக்கூறவேண்டும்- என்றனர். (ச-26)

## சிறகுகள் நூலுக்கு ஆக்கங்கள் கோரல்

சாவகச்சேரி,ஜூன் 15

தேசிய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சால் முதன்முறையாக வெளியிடப்படவுள்ள கனவுக்குச் சிறகுகள் என்ற நூலுக்கு தரமான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

18-35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் கவிதைத் தொகுப்பு, சிறுகதைத் தொகுப்பு,நாவல்கள் போன்ற ஆக்கங்களை, எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு அனுப்பி வைக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

### தமிழ்க்...

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அண்மைக்காலச் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் காலங்கடத்தும் போக்குகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

பிரதானமாக ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படாமல் நீடிப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. அந்த வாக்குறுதிகளைக் கோடிட்டுக் காட்டும் வகையிலான விசேட மனு ஒன்றை ஜனாதிபதியிடம் நேரில் கையளிப்பதற்கும் இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### புதிய...

கே.எம்.ஆனந்த விஜேபால திறந்து வைத்தார்.

கோப்பாய் பொலிஸ் நிலையம் 1995ஆம் ஆண்டு முதல் இராசபாதை வீதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான வீடுகள் மற்றும் காணிகளில் இயங்கி வந்தது. தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி காணி உரிமையாளர்கள் 2019ஆம் ஆண்டு யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். 6 ஆண்டுகள் நடைபெற்ற இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த 2025 ஜூன் மாதம் வழங்கப்பட்டது. அதன்படி, தனியார் காணிகளை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு பொலிஸார் வெளியேற வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, பழைய இடத்தில் இருந்து இராசபாதை வீதியில் சுமார் 2 கிலோமீற்றர் தூரத்தில் புதிய பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு நேற்றுத் திறக்கப்பட்டுள்ளது. இதுவரைகாலம் பொலிஸ் நிலையம் இயங்கி வந்த தனியார் காணிகள் மற்றும் வீடுகளில் இருந்து பொலிஸார் முற்றாக வெளியேறியுள்ளனர்.

இந்த நிகழ்வில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ச.பவானந்தராசா, ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி மற்றும் யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ-எ-26)

வேலையாட்கள் தேவை

சுன்னாத்தில் அமைந்துள்ள புடைவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண், பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விபரங்களுக்கு:076 63 23 554

A/L - வரலாறு

மாவட்ட, தேசிய சாதனை மிக்க பெறுபேறுகளை உருவாக்கிய, உருவாக்கும் உங்கள் ஆசிரியர்
M. பத்மன் B.A (Hons) History, P.G.D.E, M.E.D (OUSL), M.A (History)
• A/L - 2k28 புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
• A/L - 2k27 புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

கற்பிக்கும் இடங்கள்
D. M. I ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
BITSMANS மானிப்பாய்.
நியூ ஸ்ரான் சுன்னாகம்.
உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி, கொக்குவில்.
தொடர்புகளுக்கு: 077 482 5587
cs.61648) N

கண்ணீர் அஞ்சலி



பிரசாந்தன் கஜலக்ஷி

தோற்றம் 17.08.1993 மறைவு 14.06.2026

அமைதியின்
உறைவிடமாய்
பாசத்தின்
ஒளிவிளக்காய்
பண்புக்கு
இலக்கணமாய்
குடும்பத்தின்
நட்சத்திரமாய்
குடும்பத்துக்கு
ஒளி கொடுத்த தெய்வமே!
பாசம் வைத்தவர்களை
பாரினில் தவிக்க விட்டு
நீர் சென்றீரோ?...
உங்கள் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

Northway Family
(CS/47686) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் [illegible] 36 [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 15.06. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media